**சுருக்கம்**

சிறிய நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் (UIDSSMT) – மத்திய மற்றும் மாநில அரசின் பங்கான ரூ.6137.49 லட்சம் நிதியுதவி விடுவித்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை**

அரசாணை (பத்தாண்டு) எண்.463 நாள் 17.11.2006

படிக்க:

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனம், சென்னை, கடிதம் எண்.TUFIDCO/UIDSSMT/GIT Share/AM(NU), நாள் 19.10.2006.

--------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் 2006–2007 ஆம் ஆண்டிற்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (UIDSSMT) கீழ் குடிநீர் திட்ட மேம்பாட்டிற்காகவும் மற்றும் சாலை தொடரமைப்பு மேம்பாட்டிற்காகவும் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களுக்கு மத்திய அரசு தனது முதல் தவணைப் பங்காக ரூ.5455.53 இலட்சத்தினை விடுவித்துள்ளது என்றும் அதற்கு இணையாக மாநில அரசின் மூன்றில் இரண்டு பங்கான ரூ.681.96 இலட்சத்தினையும் சேர்த்து மொத்தம் ரூ.6137.49 இலட்சத்தினையும் மேற்கண்ட திட்டச் செயல்பாட்டிற்காக விடுவிக்குமாறு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்குத் தொகையை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(ரூபாய் இலட்சங்கள்)

| வ. எண். | உள்ளாட்சியின் பெயர் | மத்திய அரசின் முதல் தவணை பங்கு | மாநில அரசின் முதல் தவணை பங்கு | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|
| | **குடிநீர் வழங்கும் திட்டங்கள்** | | | |
| 1. | திருப்பத்தூர் | 259.20 | 32.40 | 291.60 |
| 2. | நாமக்கல் | 396.20 | 49.53 | 445.73 |
| 3. | பல்லடம் | 356.49 | 44.56 | 401.05 |
| 4. | அரக்கோணம் | 337.88 | 42.24 | 380.12 |
| 5. | விக்ரமசிங்கபுரம் | 98.40 | 12.30 | 110.70 |
| 6. | ஸ்ரீவில்லிபுத்தூர் | 1179.68 | 147.46 | 1327.14 |
| 7. | கூடலூர் | 210.00 | 26.25 | 236.25 |
| 8. | அறந்தாங்கி | 136.00 | 17.00 | 153.00 |
| 9. | வால்பாறை | 88.56 | 11.07 | 99.63 |

| | <u>சாலைப்பணி திட்டங்கள்</u> | | | |
|---|---|---|---|---|
| 10. | தூத்துக்குடி | 131.20 | 16.40 | 147.60 |
| 11. | குன்னூர் | 183.32 | 22.92 | 206.24 |
| 12. | கரூர் | 332.00 | 41.50 | 373.50 |
| 13. | திண்டுக்கல் | 137.20 | 17.15 | 154.35 |
| 14. | கோபிசெட்டிபாளையம் | 86.20 | 10.78 | 96.98 |
| 15. | கும்பகோணம் | 220.00 | 27.50 | 247.50 |
| 16. | மயிலாடுதுறை | 77.60 | 9.70 | 84.60 |
| 17. | உதகமண்டலம் | 482.80 | 60.35 | 543.15 |
| 18. | பெரம்பலூர் | 75.20 | 9.40 | 84.60 |
| 19. | இராஜபாளையம் | 365.20 | 45.65 | 410.85 |
| 20. | சிவகாசி | 148.80 | 18.60 | 167.40 |
| 21. | இனம்கரூர் | 65.60 | 8.20 | 73.80 |
| 22. | மணப்பாறை | 88.00 | 11.00 | 99.00 |
| | **மொத்தம்** | **5455.53** | **681.96.** | **6137.49** |

2. மேலே பத்தி 1ல் காணும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்றுக் கொண்டு மேற்கண்ட நகரங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசின் பங்கான ரூ.6137.49 இலட்சத்தினை விடுவித்து ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் விடுவிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்/

“2217–நகர்ப்பகுதி வளர்ச்சி –05 ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சி திட்டங்கள் –800. ஏனைய செலவு–பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II. மாநிலத் திட்டம் - JL - ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புதுப்பித்தல் திட்டம் – நகர்ப்புற அடிப்படை வசதி அளித்தல் – நிருவாகம் – 09. உதவி மானியங்கள் – 01 [illegible] நடப்புச் செலவுக்கான மானியங்கள் – (2217 – 05 – 800 – JL 0914)”.

4. மேலே பத்தி 2ல் விடுவிக்கப்பட்ட தொகையைப் பெற்று தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

1. மேலே பத்தி மூன்றில் குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும். இச்செலவினம் சிறிய நடுத்தர நகரங்களுக்கான அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கென பிரித்து வைக்கப்படும் கணக்குத் தலைப்பிற்கு மாற்றம் செய்ய நகராட்சி நிருவாக ஆணையர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.61875/நிதி (ந.நி.(ம)குவ.)/2006, நாள் 15.11.2006–ன் ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை–18.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5

மாநில தலைமைக் கணக்கர், சென்னை–18

மாநில தலைமைக் கணக்கர், சென்னை–35

நகல்:: நிதித்துறை, சென்னை–9

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வ/செ) துறை, சென்னை–9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.